பக்கங்கள் 08

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் - 10 வள்ளுவர் ஆண்டு 2056 மார்கழி 18 ஞாயிற்றுக்கிழமை 28.12.2025 கதிர் 049

### இது ரகசியம் அல்ல!

தமிழ் அரசுக் கட்சியிலிருந்து அதன் நாடாளுமன்றக் குழுவின் உறுப்பினர் சிறீதரனை நீக்குவதற்கான கோரிக்கை ஒன்று அதன் 2➤

## சாத்வீகமாகப் போராடும் தமிழர்களுக்கோ கைது இனத் துவேசம் கக்கும் பிக்குகளுக்குச் சுதந்திரம்

### காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் சுட்டிக்காட்டு

தமிழர் தாயகப் பிரதேசம் ஆக்கிரமிக்கப்பட்டு பௌத்தமயமாக்கப்படுவதை எதிர்த்து சாத்வீகப் போராட்டங்களை முன்னெடுக்கும் தமிழர்கள் கைதுசெய் யப்படுகின்றார்கள். ஆனால் இனத்துவேசத்தையும் கக்கும் பௌத்த தேரர்கள் தமது காழ்ப் புணர்ச்சியை சுதந்திரமாக வெளிப்படுத்துகின்றனர். இந்த அடக்குமுறைகளாலும், பாரபட்சமாக நடாத்திய ஆட்சியாளர்களாலுமே இளைஞர்கள் ஆயுதம் ஏந்தவேண்டிய துர்ப்பாக்கியநிலை ஏற்பட்டது 2➤

## என்.பி.பி. ஆளும்தரப்பின் கீழே மாகாணத் தேர்தலே நடக்காது

### முன்னாள் எம்.பி. ராஜித சேனாரத்ன திட்டவட்டம்



மாகாணசபைத் தேர்தலை இந்த ஆளும்தரப்பு தனது ஆட்சி காலத்தில் நடத்தும் என எந்த வகையிலும் எதிர்பார்க்க முடியாது. அவ்வாறு மாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட்டாலும் ஒரு சபையில் கூட ஆளும்தரப்பால் வெற்றி பெற முடியாது. எந்தவொரு நெருக்கடிகளுக்கும் ஆளும்தரப்பிடம் தீர்வு

இல்லை என முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார். 2➤

## அரசைப் பாதுகாக்கும் சட்ட வரைவு சமூக வலைத்தளக் கருத்தாடலுக்கு பெரும் அச்சுறுத்தலாக வந்து நிற்கும்

### தமிழ் அரசுக் கட்சி செயலாளர் சுமந்திரன் எச்சரிக்கை



**ஆளும்தரப்பினால் புதிதாக முன்மொழியப்பட்டிருக்கும் பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாதுகாக்கும் சட்ட வரைபு சட்டமாக்கப்படும் பட்சத்தில், அது பொதுமக்களின் கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரத்துக்கு, குறிப்பாக சமூகவலைத் தளங்கள் ஊடாக நிகழும் கருத்தாடல்களுக்குப் பெரும் அச்சுறுத்தலாக அமையும் என இலங்கைத் தமிழரசுக்கட்சியின் பொதுச்செயலாளர் சுமந்திரன் எச்சரித்துள்ளார்.**

அத்தோடு பயங்கரவாதத் தடைச்சட்டத்தைப் பதிலீடு செய்யாமல், தேர்தல் அறிக்கையில் வாக்குறுதி அளித்தவாறு அதனை முற்றாக நீக்குவதற்குரிய தொடர் அழுத்தங்களை ஆளும்தரப்புக்கு வழங்கவிருப்பதாகவும், இச்சட்டவரைவு அடுத்த கட்டத்துக்கு நகரும் பட்சத்தில், அவசியமேற்படின் அதனை உயர்நீதிமன்றத்தில் சவாலுக்கு உட்படுத்தத் தயாராக இருக்கிறார் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

தற்போது நடைமுறையில் உள்ள 1979ஆம் ஆண்டின் 48ஆம் இலக்க பயங்கரவாதத்தடைச் சட்டத்துக்குப் பதிலாக 'பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாதுகாக்கும் சட்டம்' எனும் சட்டத்தைக் கொண்டுவருவதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அதனை இலக்காகக்கொண்டு தயாரிக்கப்பட்டுள்ள சட்டவரைவு நீதியமைச்சின் உத்தியோகபூர்வ இணையத்தளப் பக்கத்தில் வெளியிடப்பட்டிருப்பதுடன், அது பற்றிய கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகளை எதிர்வரும் 2026ஆம் ஆண்டு பெப்ரவரி 28 க்கு முன்னர் தமக்கு அனுப்பிவைக்குமாறு நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார அறிவித்துள்ளார்.

இந்நிலையில் பயங்கரவாதத்தடைச்சட்டம 2➤

### உள்ளாட்சிமன்ற

## பாதீடுகளைத் தோற்கடிப்பதால் ஆளும்தரப்பிற்கு பாதிப்பில்லை

### அமைச்சர் மஹிந்த ஜயசிங்க தெரிவிப்பு



உள்ளூராட்சி மன்றங்களின் வரவு, செலவுத் திட்டங்கள் தோற்கடிக்கப்படுவதன் மூலம் ஆளும்தரப்பிற்கு எந்தவித பாதிப்பும் ஏற்படாதென பிரதி அமைச்சர் மஹிந்த ஜயசிங்க தெரிவித்துள்ளார். இவ்வாறு தோற்கடிக்கப்படுவது திசைகாட்டியின் வரவு ,செலவுத் திட்டம் அல்ல, மக்களின் வரவு, செலவுத் திட்டமே என்று அவர் மேலும் தெரிவித்தார்.

கம்பஹாவில் செய்தியாளர்களிடம் பேசியபோது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

தோல்வியடைந்த கொழும்பு மாநகர சபையின் வரவு, செலவுத் திட்டத்தில் அடுத்த ஆண்டிற்காக முன்வைக்கப்பட்ட பெருமளவிலான திட்ட முன்மொழிவுகள் உள்வாங்கப்பட்டிருந்தன என்றும், இந்த உள்ளூராட்சி மன்றங்களினூடாக மக்களுக்கு வழங்கப்பட வேண்டிய சேவைகளைச் சிறந்த முறையில் வழங்குவதற்காகவே இந்த வரவு செலவுத் திட்டம் தயாரிக்கப்பட்டது.

அத்துடன், இந்த வரவு செலவுத் திட்டத்தின் ஊடாக திசைகாட்டிக்கு வாக்களித்தவர்கள் மாத்திரமன்றி, அனைவருக்கும் சலுகைகள் கிடைக்கும். அதன்படி, வரவு செலவுத் திட்டத்தை தோற்கடிப்பதற்கு உறுப்பினர்கள் வாக்களிப்பது, அவர்களை உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களாக்குவதற்கு வாக்களித்த மக்களுக்கு எதிராகச் செயற்படுவதாகும். எதிர்க்கட்சியினர் எந்த நோக்கத்திற்காக உள்ளூராட்சி மன்றங்களின் வரவு செலவுத் திட்டங்களைத் தோற்கடிக்கின்றனர் என்பது கேள்விக்குரியது.

முற்றாக வீழ்ந்து கிடந்த ஒரு நாட்டையே நாம் பொறுப்பேற்றோம். இன்று திறைசேரியானது கடந்த ஒரு வருடத்தில் 1200 பில்லியன் ரூபாய் கையிருப்பை கட்டியெழுப்ப முடிந்துள்ளது. சுற்றுலாப் பயணிகளின் வருகை மற்றும் வருமானம் அதிகரித்துள்ளது. வெளிநாடுகளில் பணிபுரியும் தொழிலாளர்கள் இலங்கைக்கு அனுப்பும் பணம் அதிகரித்துள்ளது.

வரவு, செலவுத் திட்டப் பற்றாக்குறையை 4.5 சதவீதமளவில் பேணுவதற்கு எம்மால் முடிந்துள்ளது. அடுத்த ஆண்டிற்கான மூலதனச் செலவினங்களுக்காக 1500 பில்லியன் ரூபாயை ஒதுக்கி, நாட்டில் கணிசமான அளவிலான திட்டங்களை செயல்படுத்தத் திட்டமிட்டிருந்த வேளையிலேயே இந்த புயல் வந்தது. எவ்வாறாயினும், சவால்களுக்கு மத்தியிலும் நாட்டை கட்டியெழுப்பும் வேலைத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது என்றார்.

## பொலிஸ் மா அதிபரும் ஊடகப் பேச்சாளரும் ஜேவிபியினர் போன்றே செயற்படுகின்றனர்

### நாமல் ராஜபக்ச நேரடியாகக் குற்றச்சாட்டு



ஆளும்தரப்பினதும் ஜே.வி.பி. கட்சியினதும் ஊடகப் பேச்சாளர்கள் போன்று செயற்படுகின்றனர் என்று பொது ஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ச குற்றம் சுமத்தியுள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர்களிடம் பேசிய அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

பொலிஸ் துறையின் மதிப்பு 2➤

பொலிஸ் திணைக்களத்தின் மதிப்பைப் பாதுகாப்பதை விடுத்து, பொலிஸ் மா அதிபரும் பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் தற்போதைய

### ஹிட்லரின் வழியில் இன்றைய ஆட்சி


## விமர்சனங்களை எதிர்கொள்ள முடியாத ஆளும்தரப்பு வரலாற்றில் இது மட்டுமே



### தேசிய மக்கள் சக்தி மீது கம்மன்பில பாய்ச்சல்

இலங்கை வரலாற்றில் விமர்சனங்களை எதிர்கொள்ள முடியாத ஒரு ஆளும்தரப்பாக இந்த தேசிய மக்கள் சக்தி ஆளும்தரப்பே காணப்படுகிறது. 1980களில் முன்னெடுத்த பயங்கரவாத செயற்பாடுகளை இன்று அரச பொறிமுறையைப் பயன்படுத்தி தேசிய மக்கள் சக்தி ஆளும்தரப்பு முன்னெடுப்பதாக பிவிதுரு ஹெல உருமயவின் தலைவர் உதய கம்மன்பில குற்றஞ்சாட்டினார். 6➤

## பேரிடரால் வீடு சேதமடைந்த எல்லோருக்கும் ரூபா 5 லட்சம்



பேரிடர் நிலைமையால் வீடுகளுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புகளை நிவர்த்தி செய்வதற்காக, தனித்தனியாக சேத மதிப்பீடுகளை மேற்கொள்ளாமல், ஒவ்வொரு வீட்டிற்கும் 500,000 ரூபா வீதம் வழங்க ஆளும்தரப்பு தீர்மானித்துள்ளதாக பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.

கோபேகனை பிரதேச செயலகத்தில் நடைபெற்ற 'பிரஜ சக்தி' (மக்களின் சக்தி) முன்முயற்சி தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சியில் உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய அமைச்சர் தெரிவித்ததாவது:

இயற்கை பேரிடர்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கான 6➤

### தையிட்டி விகாரை ஆக்கிரமிப்பால்

## பாதிக்கப்பட்டவர்கள் நயினா தீவு விகாராதிபதியுடன் சந்தித்து பேச்சு

தையிட்டி விகாரைக்காக காணிகளை இழந்தவர்கள் நயினாதீவு நாக விகாரை விஹாரதிபதியை நேரில் சந்தித்து தமது காணிகளை விடுவிப்பது தொடர்பில் கலந்துரையாடி உள்ளனர்.

யாழ்ப்பாணம் தையிட்டி பகுதியில் தனியார் காணிகளை அடாத்தாக கையகப்படுத்தி இராணுவத்தினரால் திஸ்ஸ விகாரை கட்டப்பட்டுள்ளது.

குறித்த விகாரையை அகற்றி , அந்தக் காணிகளை தம்மிடம் ஒப்படைக்குமாறு , காணி உரிமையாளர்கள் நீண்ட காலமாக போராட்டம் நடத்தி வருகின்றனர்.

அரசுத் தலைவர் அநுரகுமார 6➤

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தலைவருக்கும் மத்திய குழு உறுப்பினர்களுக்கும் அனுப்பப்படுவதற்கான ஏற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன. இதனை நான் சொல்லவில்லை. 'மௌரட்ட நியூஸ்' என்ற இணையத் தளம் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது.

அண்மைக் காலமாகவே நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் தேசிய மக்கள் சக்தி ஆளும்தரப்பிற்கு ஆதரவாகச் செயற்படுகின்றார் என்கிற சர்ச்சை ஒன்று தீவிரமாக உலாவி வருகின்றது. அரசமைப்புச் சபையில் எதிர்க் கட்சிகளின் பிரதிநிதியாக அவர் இருந்தபோதும் ஆளும்தரப்புக்கு ஆதரவாகவே செயற்படுகின்றார் என்கிற குற்றச்சாட்டு அது.

கணக்காய்வாளர் நாயகம் ஒருவரை நியமிப்பது தொடர்பில் அரசுத் தலைவர் அநுரவுக்கும் அரசமைப்புச் சபைக்கும் இடையே தொடரும் இழுபறிப் போரில் ஒவ்வொரு தடவையும் சிறீதரன் ஆளும்தரப்புடன் சேர்ந்தே செயற்படுகின்றார் என்கிற குற்றச்சாட்டே அவர் தொடர்பான சர்ச்சையைத் தீவிரப்படுத்தியிருக்கிறது.

சில வாரங்களுக்கு முன்னர் நாடாளுமன்ற உறுப்பினர் சாமர சம்பத் இந்தக் குற்றச்சாட்டை நாடாளுமன்றத்தில் பகிரங்கமாகவே முன்வைத்திருந்தார். நாடாளுமன்றத்தில் உள்ளு சிறிய கட்சிகளின் பிரதிநிதியாக சிறீதரன் அரசமைப்புச் சபையில் இடம்பெற்றிருந்தாலும் அவர் அந்தக் கட்சிகளின் கொள்கையை, விருப்பு வெறுப்புக்களைப் பிரதிபலிக்காமல் ஆளும்தரப்புக்கு ஆதரவாகவே செயற்படுகின்றார் என்கிற குற்றச்சாட்டை அவர் முன்வைத்திருந்தார். தனது நாடாளுமன்ற உரை ஒன்றில் சிறீதரன் அதனை மறுத்தார்.

அதைத் தொடர்ந்து இப்போது மீண்டும் அதே சர்ச்சை வெடித்துள்ளது. கணக்காய்வாளர் நாயகம் நியமனம் தொடர்பில் அந்தச் சர்ச்சை வெடித்துள்ளது. கணக்காய்வாளர் நாயகம் பதவி வெற்றிடமாகி உள்ளது. அந்தப் பதவிக்கு அந்தத் திணைக்களத்தின் பதவி நிலையில் அடுத்துள்ளவரை நியமிப்பதற்குப் பதிலாக, வெளியிலிருந்து ஒருவரைக் கொண்டு வருவதற்கு அரசுத் தலைவர் நீண்ட நாள்களாக முயன்று வருகின்றார். தனது நெருங்கிய சகா ஒருவரை அந்தப் பதவியில் நியமிப்பதற்காகவே அரசுத் தலைவர் கடுமையாக முயற்சிக்கிறார் என்று எதிர்க்கட்சிகள் குற்றஞ்சாட்டுகின்றன.

கடைசியாக இராணுவ அதிகாரி ஒருவரை அந்தப் பதவிக்கு அரசுத் தலைவர் பரிந்துரைத்திருந்தார். அதனையும் அரசமைப்புச் சபை நிராகரித்துவிட்டது. அரசமைப்புச் சபையில் இது தொடர்பான வாக்கெடுப்பு நடந்தபோது ஆளும்தரப்பு உறுப்பினர்களுடன் சேர்ந்து சிறீதரனும் இராணுவ அதிகாரியை கணக்காய்வாளர் நாயகமாக நியமிக்க வாக்களித்தார் என்று சொல்லப்படுகின்றது. ஆனால் சிறீதரன் தரப்பில் அதற்கு மறுப்புத் தெரிவிக்கப்படுகின்றது. டிசெம்பர் 17 நடந்த அரசமைப்புச் சபைக் கூட்டத்தில் தான் நிகழ்நிலையில் (ஒன்லைன்) கலந்துகொண்டபோதும், சிங்களத்திலிருந்து தமிழிற்கான மொழிபெயர்ப்பு தனக்குக் கிடைக்காத காரணத்தால் அங்கு என்ன பேசப்படுகின்றது என்று புரியாத நிலையில் 10 நிமிடங்களில் அந்தக் கூட்டத்தில் இருந்து தான் விலகிவிட்டார் என்றும் சிறீதரன் தரப்பில் தெரிவிக்கப்படுகின்றது. ஆனாலும் கூட்டத்தில் இராணுவ அதிகாரிக்கு ஆதரவாக சிறீதரன் வாக்களித்தார் என்று தெரிவிக்கப்படுவதன் காரணமாக, தன்னுடைய நிலைப்பாட்டை விளக்கி, அதாவது அந்தக் கூட்டத்த்தில் தான் எந்தவொரு வாக்களிப்பிலும் கலந்துகொள்ளவில்லை என்று தெளிவுபடுத்தி சபாநாயகருக்கும் அரசமைப்புச் சபையின் உறுப்பினர்களுக்கும் கடிதம் அனுப்பி வைத்திருக்கிறார் என்றும் சிறீதரன் தரப்பில் தெரிவிக்கப்படுகின்றது.

ஆனால், அவரது விளக்கத்தை அவரது கட்சியின் அரசியல் எதிரியாக இருந்தாலும் சிறீதரனின் தனிப்பட்ட நெருங்கிய நண்பரான கஜேந்திரகுமாரேகூட ஏற்கவில்லை. சிறீதரன் தனது செயலுக்காக பகிரங்க மன்னிப்புக் கேட்கவேண்டும் என்று அவர் காட்டமாக விமர்சித்திருந்தார். இந்த நிலையில்தான் கட்சி சிறீதரன் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கவேண்டும் என்கிற கோரிக்கை வலுப்பெற்றுள்ளதாகச் சொல்லப்படுகின்றது. தமிழ் அரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் இது தொடர்பில் கட்சியின் பொதுச் செயலாளருக்கு ஒரு கடிதத்தை அனுப்பியுள்ளார் என்று கூறப்படுகின்றது.

அரசமைப்புச் சபையில் ஆளும்தரப்புக்கு ஆதரவாகச் சிறீதரன் வாக்களித்தார் என்கிற விவகாரம் ஏற்கனவே தமிழ் அரசுக் கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டிருக்கின்றது. அப்போதும் தான் அப்படிச் செய்யவில்லை என்றும், அதனை அரசமைப்புச் சபைக் கூட்ட அறிக்கையை முன்வைத்துத் தான் நிரூபிப்பார் என்றும் சிறீதரன் தெரிவித்திருந்தார். அதன் பின்னரே கணக்காய்வாளர் நாயகம் பதவிக்கு அரசுத் தலைவர் பரிந்துரைத்த இராணுவ அதிகாரியை அவர் ஆதரித்தார் என்கிற சர்ச்சை வெடித்துள்ளது. இதனால் அவரை உடனடியாகக் கட்சியைவிட்டு விலக்கவேண்டும் என்ற கோரிக்கையும் கட்சித் தலைமைக்கும் மத்திய குழுவிற்கும் விடுக்கப்பட்டிருப்பதாகவே 'மௌரட்ட நியூஸ்' தகவல் தெரிவித்துள்ளது.

கட்சித் தலைமையிலுள்ளவர்களுடன் தொடர்புகொண்டபோது இந்தத் தகவலை உறுதிப்படுத்த மறுத்துவிட்டார்கள். இருந்தாலும் கட்சியின் அடுத்த மத்திய குழுக் கூட்டத்தில் இந்த விவகாரம் பூதாகரமாக வெடிக்கும் என்றே எதிர்பார்க்கப்படுகின்றது.

இடிமின்னல்

## சாத்வீகமாக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

என வடக்கு, கிழக்கு வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

தையிட்டியில் சட்டவிரோதமாக நிர்மாணிக்கப்பட்டுள்ள திஸ்ஸ விகாரைக்கு எதிராகக் கடந்த ஞாயிற்றுக்கிழமை (21) முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தில் கலந்துகொண்ட வேலன் சுவாமிகள் பொலிஸாரால் இழுத்துச்செல்லப்பட்டு கைதுசெய்யப்பட்டார்.

இச்சம்பவம் தொடர்பில் தமது கண்டனத்தை வெளிப்படுத்தி வடக்கு, கிழக்கு வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கத்தினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

தையிட்டி போராட்டத்தில் வேலன் சுவாமிகள் தாக்கப்பட்டமையையும், கைதுசெய்யப்பட்டமையையும் நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

தமிழர்கள் அடக்கி ஒடுக்கப்படுவதையும், தமிழர் தாயகப்பிரதேசம் ஆக்கிரமிக்கப்பட்டு பௌத்தமயமாக்கப்படுவதையும் இந்நாட்டுப் மக்களுக்கும், சர்வதேசத்துக்கும் வெளிப்படுத்தும் நோக்கிலும், தமது எதிர்ப்பைக் காண்பிக்கும் வகையிலும் தமிழர்கள் சாத்வீக வழிமுறைகளில் போராட்டங்களை நடாத்துகின்றனர். இப்போராட்டங்களை மழுங்கடிப்பதற்காக கடந்தகால ஆளும்தரப்புகள் அடக்குமுறைகளையும், போலிஸ் அராஜகங்களையும் பிரயோகித்து வந்தன. ஆனால் தற்போதைய புதிய ஆளும்தரப்பு அதனைவிட ஒரு படி மேலே சென்று, இந்த சாத்வீகப் போராட்டங்களில் ஒரு மதகுருவாக, ஒடுக்கப்பட்ட தமிழனாகக் கலந்துகொண்ட வேலன் சுவாமிகளைத் தாக்கியதுடன் கைது செய்திருக்கின்றது. வேறுபல மக்கள் பிரதிநிதிகள் மற்றும் சமூக ஆர்வலர்கள் தாக்கப்பட்டிருப்பதுடன் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அவர்கள் செய்த தவறு என்ன?

தமது மக்களுக்கு இழைக்கப்படும் அநீதிக்கு எதிராக நடாத்தப்படும் சாத்வீகப் போராட்டத்தில் கலந்துகொண்டு ஆதரவு தெரிவித்தது மாத்திரமேயாகும். ஆனால் இனவாதத்தையும், இனத்துவேசத்தையும் கக்கும் பௌத்த தேரர்கள் தமது காழ்ப்புணர்ச்சியை சுதந்திரமாக வெளிப்படுத்துகின்றனர். அவ்வாறெனில், இது பாரபட்சமான ஆட்சியா?

இவர்கள்தான் தமிழர்களுக்குத் தீர்வைப் பெற்றுத்தரப்போகின்றார்களா? இந்த அடக்குமுறைகளாலும், பாரபட்சமாக நடத்திய ஆட்சியாளர்களாலுமே இளைஞர்கள் ஆயுதம் ஏந்தவேண்டிய துர்ப்பாக்கியநிலை ஏற்பட்டது.

'மாற்றம்' என்ற தாரக மந்திரத்துடன் ஆட்சிபீடமேறிய ஆட்சியாளர்கள் ஒரு விடயத்தை உணரவேண்டும். மாற்றம் சொல்லில் மாத்திரம் இருந்து பயனில்லை. மாறாக அந்த மாற்றம் மனதிலும், சிந்தனையிலும், செயலிலும் வரவேண்டும். அதன்மூலம் தமிழர்களின் மனதை வெல்லவேண்டும். இதனை சர்வதேச சமூகம் நன்கு உணர்ந்துகொள்ள வேண்டும் -என்று அறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது

## என்.பி.பி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

களுத்துறையில் வெள்ளிக்கிழமை செய்தியாளர்களிடம் பேசிய அவர், மேலும் தெரிவித்ததாவது:

அரசியல்வாதிகளுக்கு எதிராக கருத்துக்கள் தெரிவிக்கப்படுகின்றன என்பதற்காக ஊடக நிறுவனங்களைத் தடை செய்வதற்கு எமக்கு எவ்வித உரிமையும் இல்லை. சர்வாதிகார ஆளும்தரப்புகள் மாத்திரமே ஊடக அடக்குமுறைகளை மேற்கொள்ளும். ஜனநாயக ஆட்சியில் ஊடகங்களுக்கு கட்டுப்பாடுகளோ வரையறைகளோ விடுக்கப்படுவதில்லை.

2002ஆம் ஆண்டு திருத்தப்பட்ட குற்றவியல் சட்டத்துக்கமைய ஊடகங்கள் அவதூறு பரப்பும் பட்சத்தில் , அந்த ஊடகத்துக்கு எதிராக சிவில் வழக்கு தொடர முடியும். முன்னாள் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க 2002இல் குற்றவியல் அவதூறு சட்டத்தை நீக்கி அன்று ஊடக சுதந்திரத்தை உறுதிப்படுத்தியதை இன்று நினைவுபடுத்த விரும்புகின்றோம்.

இவ்வாறு உறுதிப்படுத்தப்பட்ட ஊடக சுதந்திரத்தை மீளப் பெற முயற்சிப்பது பெரும் தவறாகும். இவ்வாறான செயற்பாடுகள் ஆளும்தரப்பின் அழிவுக்கு வழி வகுக்குமே தவிர, ஊடகங்களின் அழிவுக்கு அல்ல.

பிரதான வைத்தியசாலைகள் பலவற்றிலும் தற்போது அத்தியாவசிய மருந்துகளுக்கு தட்டுப்பாடு நிலவுகிறது. அவற்றுக்கு தீர்வு வழங்குவதை விடுத்து ஆளும்தரப்பு ஊடகங்களை முடக்குவதிலேயே தீவிரமாக அவதானம் செலுத்தி வருகிறது.

இந்த ஆளும்தரப்பு ஆட்சியமைத்த போது, எதிர்க்கட்சிகளும் இவர்களுக்கு ஒத்துழைப்பு வழங்கினர். ஆனால் காலம் செல்லும்போது இந்த ஆளும்தரப்பால் தொடர்ந்தும் பயணிக்க முடியாது என்பதை அனைவரும் உணர்ந்துள்ளனர். இவர்கள் ஆட்சியமைத்து ஓராண்டு கடந்துள்ள

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com

## அரசைப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

முற்றாக நீக்கப்படவேண்டும் என வலியுறுத்தியும், அச்சட்டம் குறித்து மக்களுக்கு விழிப்புணர்வூட்டும் வகையிலும் கடந்த காலங்களில் நாடளாவிய ரீதியில் கையெழுத்துப்போராட்டத்தை முன்னின்று நடத்திய சுமந்திரன், பயங்கரவாதத்தடைச்சட்டம் மற்றும் அதனைப் பதிலீடு செய்யும் வகையில் முன்மொழியப்பட்ட பயங்கரவாத எதிர்ப்புச்சட்டமூலம் என்பவற்றின் உள்ளடக்கங்களை விடவும் மோசமான விடயங்கள் இப்புதிய வரைவில் உள்வாங்கப்பட்டிருப்பதாக ஏற்கனவே சுட்டிக்காட்டியிருந்தார்.

இவ்வாறானதொரு பின்னணியில் பயங்கரவாதத்தைக் கையாள்வதற்கு விசேட சட்டமொன்று தேவையில்லை எனத் தெரிவித்துள்ள சுமந்திரன், அவசியமேற்படும் பட்சத்தில் அரசுத் தலைவரினால் அவசரகால நிலையைப் பிரகடனப்படுத்த முடியும் என்றும், அதன் கீழ் அவசியமான சட்டங்கள், வழிகாட்டல்களை இயற்றமுடியும் என்றும் சுட்டிக்காட்டினார்.

அதேபோன்று தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் அறிக்கையிலும், பயங்கரவாதத்தடைச்சட்டம் முற்றாக நீக்கப்படும் என்று கூறப்பட்டிருக்கின்றதே தவிர, பிறிதொரு சட்டத்தின் ஊடாகப் பதிலீடு செய்யப்படும் என்று கூறப்படவில்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

"இப்போது அரசாங்கத்தினால் முன்மொழியப்பட்டிருக்கும் சட்டவரைவு சட்டமாக்கப்படும் பட்சத்தில், அது நாட்டுமக்களின் கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரத்துக்குப் பெரும் அச்சுறுத்தலாக அமையும். குறிப்பாக சமூக வலைத்தளங்கள் ஊடாக இடம்பெறும் கருத்தாடல்களைக் கட்டுப்படுத்துவதற்கு அவசியமான மிகமோசமான சரத்துக்கள் இவ்வரைவில் உள்வாங்கப்பட்டுள்ளன. இருப்பினும் இது வெறும் வரைவு மாத்திரமே என்பதால், இப்போது நீதிமன்றத்தை நாடவேண்டிய அவசியமில்லை" என்றும் சுமந்திரன் தெளிவுபடுத்தினார்.

## பொலிஸ் மா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கேள்விக்குறியாக்கப்பட்டுள்ளது. ஒரு தனியார் ஊடக நிறுவனம் பொலிஸாரின் நடவடிக்கையை நேரடி ஒளிபரப்பு செய்ததற்காக, அந்த ஊடகத்தை முடக்குவதற்கு ஆளும்தரப்பு தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணைக்குழுவைப் பயன்படுத்துகிறது. ஊடகங்களை ஒடுக்கும் இந்த நடவடிக்கையில் பொலிஸ் மா அதிபர் முன்னின்று செயற்படுவது கவலைக்குரிய விடயமாகும்.

பொலிஸ் மா அதிபர் , இந்த அளவுக்கு அரசியல்வாதிகளுக்கு முட்டுக் கொடுக்க வேண்டாமெனக் கேட்டுக்கொள்கிறேன். உங்களின் கீழ் பணியாற்றும் ஒரு பொலிஸ் அதிகாரி தாக்குதலுக்கு உள்ளாகி சிறையில் இருக்கும் நிலையில், அவரது மதிப்பைப் பாதுகாக்க நீங்கள் முன்வரவில்லை.

எங்களை 'திருடர்கள்' என்றும் 'போதைப்பொருள் வியாபாரிகள்' என்றும் விமர்சித்த இந்த ஆளும்தரப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களே கஞ்சா தோட்டம் வைத்திருந்து அகப்பட்டுள்ளனர். இவர்களது ஆதரவாளர்களும், ஆசிரியர் சங்க பிரதிநிதிகளுமே பாடசாலை மாணவர்களுக்குப் போதைப்பொருள் விற்பனை செய்து கைதாகிறார்கள். சட்டத்தை பாரபட்சமின்றி நடைமுறைப்படுத்துவதை விடுத்து, ஆளும் தரப்பினரைக் காப்பாற்றுவதிலும் ஊடகங்களை அச்சுறுத்துவதிலும் பொலிஸார் கவனம் செலுத்துவது ஜனநாயகத்திற்கு ஆபத்தானது.

நாட்டை நிமிர்த்தப் போகிறோம் என்று கூறிக்கொண்டு இவ்வாறான அடக்குமுறைகளை ஆளும்தரப்பு முன்னெடுக்குமானால், அதன் இறுதிப் பாதிப்பை நாட்டு மக்களே எதிர்கொள்ள நேரிடும் என்பதை ஆட்சியாளர்கள் நினைவில் கொள்ளவேண்டும் - என்றார்.

## பொலிஸ் மா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கொழும்பில் நேற்றுச் செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்த அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கை வரலாற்றில் விமர்சனங்களை எதிர்கொள்ள முடியாத ஒரு ஆளும்தரப்பாக இந்த தேசிய மக்கள் சக்தி ஆளும்தரப்பு மட்டுமே காணப்படுகிறது. 1987, 1989 காலங்களில் தமக்கு எதிராகச் செயற்பட்டவர்களை பார்த்ததைப் போன்றே, இன்றும் தமக்கெதிராக செயற்படுபவர்களை இந்த ஆளும்தரப்பு பார்க்கின்றது. அன்று தம்மை விமர்சித்தவர்களை ஜேவிபியினர் கொன்று குவித்தனர்.

இவ்வாறான பாசிசவாதிகளிடம் மக்கள் தவறுதலாக ஆட்சியைக் கையளித்துள்ளனர். அன்று முன்னெடுத்த பயங்கரவாத செயற்பாடுகளை இன்று அரச பொறிமுறையைப் பயன்படுத்தி முன்னெடுக்கின்றனர். ஹிட்லர் தனது ஆட்சியில் பொலிஸாரை கொண்டு ஊடகங்களை (தொடர்ச்சி 6ஆம் பக்கம்)


JDr
JDR CARE HOME & MEDICALS
மூத்த பிரஜைகளுக்கான பூரண வசதிகளுடனான பராமரிப்பு
FACILITIES
Medical Care
24×7 Nursing Care
Adjustable Hospital Beds
AC / Non AC rooms
Attached Bathroom
Laundry
Physiotherapy
Speech therapy
NG care
BOOK NOW
0701348384
46,Brodie Lane,

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## சுனாமியிலிருந்து தித்வாவரை

*2004 டிசெம்பர் 26. அந்த நாள் இலங்கை வரலாற்றில் அழிக்க முடியாத ஒரு கறுப்பு கோடாக பதிந்தது. சுனாமி எனும் கடல் பேரழிவு, கணக்கற்ற உயிர்களைப் பறித்து, முழு கிராமங்களையுமே அழித்தது. நாற்பதாயிரத்துக்கும் அதிகமான மக்கள் உயிரிழந்தனர். பில்லியன் கணக்கான சொத்துகள் நாசமாயின. “இதிலிருந்து பாடம் கற்றுக்கொள்வோம்” என்ற உறுதிமொழிகள் அன்றைய நாட்களில் பலமுறை உச்சரிக்கப்பட்டன. ஆனால் இருபது ஆண்டுகள் கடந்த நிலையில், ‘தித்வா’ சூறாவளி ஏற்படுத்திய அழிவுகள், நாம் பாடம் கற்றுக்கொள்ளவில்லை என்பதை வேதனையுடன் நினைவூட்டுகின்றன.*

*கடந்த இரண்டு மாதங்களில் மட்டும், ‘தித்வர் காரணமாக ஆயிரத்துக்கு அருகிலான உயிர்கள் காவு கொடுக்கப்பட்டுள்ளன. தொடக்க நிலைக் கணிப்புகளின்படி நான்கு பில்லியன் அமெரிக்க டொலரைத் தாண்டிய இழப்புகள் பதிவாகியுள்ளன. வெள்ளம், நிலச்சரிவு, வீடுகளின் அழிவு, வாழ்வாதார நாசம் என பாதிப்புகள் நாடு முழுவதும் பரவி நிற்கின்றன.*

*இயற்கையை நாம் கட்டுப்படுத்த முடியாது என்பது உண்மை. ஆனால் அதன் தாக்கத்தை குறைக்கும் தயார்நிலையை உருவாக்குவது மனித சமூகத்தின் கடமை. அந்தக் கடமையில் நாம் இன்னமும் தோல்வியடைந்து வருகிறோம்.*

### பேரழிவு தயார்நிலை கட்டாயம்

*சிங்கப்பூர், ஜப்பான் போன்ற சிறிய அல்லது இயற்கை அபாயங்களுக்கு உள்ளாகும் நாடுகள், பேரழிவு தயார் நிலையை தங்களது தேசிய பாதுகாப்பின் ஓர் அங்கமாகவே கருதுகின்றன. அங்கு அது ஒரு தற்காலிகத் திட்டமல்ல் பள்ளிப் பருவத்திலிருந்து சமூக வாழ்வின் ஒரு பகுதியாக வடிவமைக்கப்பட்ட பண்பாடு. இலங்கை போன்ற கடல்சூழல், மழை முறை, நில அமைப்பு ஆகியவற்றால் அடிக்கடி பாதிக்கப்படும் நாடு, இத்தகைய மாதிரிகளைப் படித்து, தன் தேவைக்கு ஏற்ப மாற்றிக் கொள்வது காலத்தின் கட்டாயம்.*

*சிங்கப்பூரில், சிவில் பாதுகாப்புப் பணிகள் சிங்கப்பூர் சிவில் பாதுகாப்புப்படையால் ஒருங்கிணைக்கப்படுகின்றன. அங்கு பேரழிவு கல்வி பாடத்திட்டத்தின் ஒரு பகுதியாகவே உள்ளது. உயர்நிலைப் பள்ளிகளில் செயல்படும் தேசிய சிவில் பாதுகாப்பு கேடெட் படை, மாணவர்களுக்கு முதலுதவி, தீ பாதுகாப்பு, அவசர இடப்பெயர்வு போன்ற அடிப்படைத் திறன்களை கற்பிக்கிறது. இது அறிவை மட்டும் அல்ல, தன்னம்பிக்கை, ஒழுக்கம், குழுப்பணி ஆகியவற்றையும் வளர்க்கிறது.*

*மேலும், அனைத்து குடிமக்களுக்கும் திறந்த சமூக அவசர தயார்நிலைத் திட்டங்கள் நடைமுறையில் உள்ளன. வாரம் ஏழு நாட்களும் நடைபெறும் இந்தப் பயிற்சிகள், வயது, தொழில், சமூக நிலை ஆகியவற்றுக்கு ஏற்ப வடிவமைக்கப்பட்டுள்ளன. வருடந்தோறும் நடத்தப்படும் அவசர தயார்நிலை தினங்கள், உண்மையான பேரழிவு சூழலை ஒத்த பயிற்சிகளை வழங்குகின்றன. எச்சரிக்கை ஒலிகள், குறுஞ்செய்திகள், ஊடக அறிவிப்புகள் என பொதுமக்கள் எப்போதும் தயார் நிலையில் வைக்கப்படுகிறார்கள்.*

### ஜப்பான் முன்னுதாரணம்

*பூகம்பம், சுனாமி, புயல் ஆகியவற்றால் அடிக்கடி பாதிக்கப்படும் ஜப்பான், பேரழிவு கல்வியை வாழ்க்கை முழுவதும் தொடரும் செயல்முறையாக மாற்றியுள்ளது. பாடசாலைகளில் வழக்கமான இடப்பெயர்வு பயிற்சிகள், அபாய வரைபடங்கள், புவியியல் மற்றும் அறிவியல்பாடங்களுடன் இணைந்த விளக்கங்கள் வழங்கப்படுகின்றன. குடும்பங்களுக்காக அரசு மற்றும் உள்ளாட்சி அமைப்புகள் அபாய வரைபடங்களையும் வழிகாட்டி நூல்களையும் வழங்குகின்றன. சமூக பயிற்சிகள், விழிப்புணர்வு முகாம்கள், பொதுக் கலந்துரையாடல்கள் ஆகியவை ஒருங்கிணைந்த பொறுப்புணர்வை உருவாக்குகின்றன.*

*சிங்கப்பூரும் ஜப்பானும் ஒரு முக்கிய உண்மையை புரிந்துகொண்டுள்ளன. குழந்தைகள் மாற்றத்தின் முகவர்கள். அவர்கள் கற்றுக்கொள்ளும் அறிவும் திறன்களும், குடும்பங்களிலும் சமூகங்களிலும் பரவி, பேரழிவின்போது உயிரைக் காப்பாற்றும் ஆயுதமாக மாறுகின்றன. இலங்கையில் இத்தகைய ஒருங்கிணைந்த, தொடர்ச்சியான தயார்நிலை பண்பாடு இன்னமும் உருவாகவில்லை.*

*சுனாமிக்குப் பின்னர் தொடங்கிய பல திட்டங்கள் காலப்போக்கில் கைவிடப்பட்டன. இன்று திட்வா நமக்கு மீண்டும் ஒரு வாய்ப்பை வழங்குகிறது. அந்த வாய்ப்பை வீணடித்தால், எதிர்கால பேரழிவுகள் இன்னும் அதிக விலையை வசூலிக்கும்.*

### கற்றுக்கொள்ளாவிட்டால்.

*பேரழிவுகள் இயற்கையின் செயல். ஆனால் அதனால் ஏற்படும் பேரழிவு மனித நிர்வாகத்தின் தோல்வி. ‘தித்வா’, சுனாமியின் நினைவுகளை மீண்டும் எழுப்பியுள்ளது. இப்போது நாம் தீர்மானிக்க வேண்டியது. கடந்த காலத் தவறுகளை ஏற்றுக்கொண்டு, பிற நாடுகளின் சிறந்த நடைமுறைகளை தழுவி, பேரழிவு தயார் நிலையை தேசிய பண்பாடாக மாற்றப் போகிறோமா? அல்லது மறுபடியும் உயிர்களையும் வளங்களையும் இழந்து, “பாடம் கற்றுக்கொள்வோம்” என்ற பழைய வாக்கியத்தை மட்டுமே உச்சரிக்கப் போகிறோமா?*

*வரலாறு, கற்றுக்கொள்ளாதவர்களுக்கு இரக்கம் காட்டாது.*

# கொழும்பு மாநகர சபையின் பாதீடு மீண்டும் டிசெ. 31இல்

கொழும்பு மாநகர சபையின் தோல்வியடைந்த அடுத்த வருடத்துக்கான வரவு, செலவு திட்டத்தை டிசெம்பர் 31 புதன்கிழமை சபைக்கு சமர்ப்பிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. கொழும்பு மாநகரசபை மேயர் விராய் கெலி பல்தசார் தலைமையில் ஆளும் கட்சி உறுப்பினர்கள் கூடியே இந்த தீர்மானத்தை மேற்கொள்ளனர்.

கொழும்பு மாநகரசபையின் வரவு, செலவு திட்டம் கடந்த 22ஆம் திகதி திங்கட்கிழமை சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டு விவாதிக்கப்பட்ட பின்னர், இடம்பெற்ற வாக்கெடுப்பில் 57 க்கு 60 என்ற அடிப்படையில் வரவு செலவு திட்டம் தோற்கடிக்கப்பட்டது.

தோற்கடிக்கப்பட்ட வரவு செலவு திட்டத்தை 14 நாட்களுக்குள் மீண்டும் முன்வைத்து நிறைவேற்றிக் கொள்ளவேண்டும். என்றாலும் இன்னும் 5 நாட்களில் இந்த வருடம் முடிவடைவதால், டிசெம்பர் 31 பாதீட்டை மீண்டும் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்ட பாதீடே மீண்டும் சமர்ப்பிக்கப்பட்டால் அதனை மீண்டும் எதிர்ப்போம் என்று மாநகர சபையின் கூட்டு எதிர்க்கட்சிகளின் தேசிய அமைப்பாளர் மன்சில் தெரிவித்தார்.

“ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்ட வரவு செலவு திட்டத்தில் பல்வேறு குறைபாடுகள் மற்றும் சாத்தியப்படாத வருமான இலக்கு போன்ற காரணங்களை அடிப்படையாகக்கொண்டு, கூட்டு எதிர்க்கட்சிகள் வரவு செலவு திட்டத்துக்கு எதிராக வாக்களிக்க தீர்மானித்திருந்தோம். இந்நிலையில் தற்போது பாதீடு சமர்ப்பிக்கப்படும்போது, அதில் மாற்றம் எதுவும் இல்லாது சமர்ப்பித்தால், அதற்கு எம்மால் ஆதரவளிக்க முடியாது. அதனால் கொழும்பு மாக்களுக்கு நன்மை பயக்கக்கூடிய, நடைமுறைக்கு சாத்தியமான முறையில் தயாரிக்கப்பட்ட பாதீட்டை முன்வைக்கவேண்டும். அப்போதே அது தொடர்பில் எமக்கு ஆராய்ந்து பார்க்க முடியும்” என்று அவர் தெரிவித்தார்.

பாதீடு, டிசெம்பர் 31 காலை 10 மணிக்கு சமர்ப்பிக்கப்பட்டு, பின்னர் வாக்கெடுப்புக்கு விடப்படும். விவாதம் இடம்பெறாது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## யாழ். சர்வதேச திரைப்படவிழா டிசெம்பர் 30இல் தொடக்கம்

11ஆவது யாழ்ப்பாண சர்வதேச திரைப்பட விழா டிசெம்பர் 30 செவ்வாய்க்கிழமை முதல் 2026 ஜனவரி 4 வரை நடைபெறவுள்ளது.

சுயாதீன சினிமாவை சர்வதேச ரீதியில் கொண்டு செல்லும் நோக்குடன் ‘யுபநனெய 14’ நிறுவனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இவ்விழாவிற்கு சிலோன் தியேட்டர்ஸ் மற்றும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் ஆகியன பிரதான அனுசரணை வழங்குகின்றன.

திரைப்பட விழாவின் தொடக்க நிகழ்வு டிசெம்பர் 30 மாலை 6.15 மணிக்கு யாழ்ப்பாணம் திருவள்ளுவர் கலாசார நிலையத்தில் நடைபெறவுள்ளது. இதன்போது இந்திய இயக்குநர் பிரதீப் குருபாவின் தி எல்சியன்பீலட் (The Elysian Field) திரைப்படம்திரையிடப்படவுள்ளது. யாழ்ப்பாணம் கார்கில்ஸ் சுற்றுவட்ட ரீகல் சினிமா, கலாம் கலாசார மையம் மற்றும் யாழ்ப்பாணம் திருவள்ளுவர் கலாசார நிலையம் ஆகிய இடங்களில் திரையிடல்கள் இடம்பெறவுள்ளன.

இதில் இலங்கை, இந்தியா, ஜேர்மனி, பிரான்ஸ், ஈரான், ஜப்பான், அமெரிக்கா உள்ளிட்ட 16 நாடுகளைச் சேர்ந்த 60 இற்கும் மேற்பட்ட திரைப்படங்கள், ஆவணப்படங்கள் மற்றும் குறும்படங்கள் திரையிடப்படவுள்ளன.

இந்தியத் திரைப்பட மேதை ரித்விக் கட்டக்கின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு இம்முறை விழா அவருக்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான விசேட மாஸ்டர் கிளாஸ் டிசம்பர் 31 பேராசிரியர் அங்கூரன் தத்தாவினால் நடத்தப்படவுள்ளது. அத்துடன் விமுக்தி ஜயசுந்தரவின் கைவிடப்பட்ட நிலம் (The Forsaken Land) மற்றும் அசோக ஹந்தகமவின் ‘சந்த தடயம’ ஆகிய திரைப்படங்களும் விசேடமாகத் திரையிடப்படவுள்ளன. சினிமாத்துறையில் சர்வதேச ரீதியில் பங்காற்றிய பிரேமேந்திர மசூம்தருக்கு (சேநஅநனெசய ஆயணரஅனநச) இம்முறை ‘வாழ்நாள் சாதனையாளர் விருது’ வழங்கப்படவுள்ளது. அத்துடன் சிறந்த அறிமுகத் திரைப்படம், சிறந்த ஆசிய ஆவணப்படம் மற்றும் சிறந்த குறும்படங்களுக்கான விருதுகளும் வழங்கி வைக்கப்படவுள்ளன.

ஜேர்மன் கலாசார நிலையம் (புழநவாந-ஐளெவவைரவ),இந்திய உயராணையரகத்தின் சுவாமி விவேகானந்தா கலாசார நிலையம், பிரிட்டிஷ் கவுன்சில் உள்ளிட்ட சர்வதேச நிறுவனங்கள் இவ்விழாவிற்கு ஒத்துழைப்பு வழங்குகின்றன.

## மத்தள விமான நிலையத்தில் தனியாருக்கும் இடம்தர முடிவு

மத்தள சர்வதேச விமான நிலையத்தை அரச-தனியார் பங்களிப்பு வேலைத் திட்டத்தின் கீழ் தனியார் நிறுவனங்களுக்கு வழங்குவதற்கான முன்மொழிவு தயாரிக்கப்பட்டுள்ளதாகத் துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் கலாநிதி அனுர கருணாதிலக்க தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அமைச்சர் தெரிவித்ததாவது:

மத்தள விமான நிலையத்தை எந்தவொரு சந்தர்ப்பத்திலும் தனியார் மயமாக்கும் நடவடிக்கை எடுக்கப்படமாட்டாது.

அரச-தனியார் பங்களிப்பு வேலைத்திட்டத்தின் கீழ் புதிய முன்மொழிவு அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டு அனுமதி பெறப்படும், அதனைத் தொடர்ந்து விமான நிலையத்திற்கான விருப்பக் கோரல்கள் அழைக்கப்படும் என்றும் குறிப்பிட்டார்.

அத்துடன், மத்தள விமான நிலையத்துடன் இணைந்து வர்த்தக நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு தற்போது வரை மூன்று தனியார் நிறுவனங்கள் விருப்பம் தெரிவித்துள்ளன.

இந்த வேலைத் திட்டத்தின் கீழ் விமானத் திருத்தப் பணிகள், பயிற்சிகள் மற்றும் எரிபொருள் விநியோகம் போன்ற பல்வேறு துறைகளில் முதலீட்டு வாய்ப்புகளைத் திறக்க எதிர்பார்க்கப்படுகிறது என்றார்.

## பெற்றோல் குண்டு வீச திட்டமிட்ட குழுவொன்று சீதுவையில் கைது

சீதுவையில் உள்ள இரவு நேர களியாட்ட விடுதி ஒன்றின் மீது பெற்றோல் குண்டுத் தாக்குதல் நடத்தத் திட்டமிட்டிருந்ததாகக் கூறப்படும் குழுவொன்று கைது செய்யப் பட்டுள்ளது.

மேல்மாகாண வடக்கு குற்றத்தடுப்புப் பிரிவினரால் முன்னெடுக்கப்பட்ட விசேட சுற்றிவளைப்பின் போது, 6 சந்தேக நபர்களும் அவர்களிடமிருந்து 6 பெற்றோல் குண்டுகளும் கைப்பற்றப் பட்டுள்ளன.

கைது செய்யப்பட்டவர்களில் குறித்த நிறுவனத்தின் முகாமையாளர், வர்த்தகர் ஒருவர், மூன்று முச்சக்கர வண்டி சாரதிகள் மற்றும் மற்றொரு நபர் அடங்குவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பாக மேல் மாகாண வடக்கு குற்றத்தடுப்புப் பிரிவினர் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## பற் சத்திர சிகிச்சை நிபுணர்கள் 62 பேருக்கு நாளை நியமனம்

நாட்டின் சுகாதார சேவையில் 62 பற் சத்திர சிகிச்சை நிபுணர்கள் இணைக்கப்படவுள்ளனர். அவர்களுக்கான நியமனக் கடிதங்கள் நாளை திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு சுகாதார மற்றும் ஊடக அமைச்சின் பிரதான கேட்போர் கூடத்தில் சுகாதார மற்றும் ஊடக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தலைமையில் வழங்கப்பட உள்ளன.

இந்தப் பற் சத்திர சிகிச்சை நிபுணர்கள் இலங்கை மற்றும் வெளிநாட்டு பல்கலைக்கழகங்களில் உள்ள மருத்துவ பீடங்களில் ஐந்து ஆண்டுகள் இளங்கலை கல்வியைப் பெற்றவர்கள், அதன் பிறகு அரசு மருத்துவமனைகளில் விசேட மருத்துவர்கள் மற்றும் அனுபவம் வாய்ந்த மருத்துவர்களின் மேற்பார்வையின் கீழ் ஒரு வருட பயிற்சியைப் பெற்றுள்ளனர்.

இந்த நியமனங்கள் 01.01.2026 முதல் அமலுக்கு வரும் இந்த நியமனங்களை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் உட்பட தொலைதூரப் பகுதிகளில் உள்ள அரசு மருத்துவமனைகள் மற்றும் சுகாதார நிறுவனங்களில் பணியமர்த்த சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

சுகாதார அமைச்சின் செயலாளர் அனில் ஜாசிங்க, சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அசேல குணவர்தன, துணை இயக்குநர் (பல் சேவைகள்) நிபுணர் சந்தன கஜநாயக்க மற்றும் அமைச்சின் அதிகாரிகள் இந்த நிகழ்வில் கலந்து கொள்ள உள்ளனர்.

## வரவுள்ள மழையை எதிர்கொள்ளத் தயார்

### இடர் முகாமைத்துவ நிலையம் தெரிவிப்பு

எதிர்வரும் நாட்களில் ஏற்படக்கூடிய மழையுடனான வானிலை அதிகரிப்புக்கு முகம் கொடுப்பதற்காக பேரிடர் முகாமைத்துவப் பிரிவுகள் தற்போது தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாக இடர் முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

இடர் முகாமைத்துவ நிலையத்தின் பணிப்பாளர் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் சம்பத் கொட்டுவேகொட தெரிவித்ததாவது:

நாளை முதல் நிலவக்கூடிய அலை வடிவான காற்று காரணமாக மழையுடனான வானிலை அதிகரிக்கும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது. இதனை கருத்திற்கொண்டு, கடற்படை வீரர்கள், விமானங்கள் மற்றும் படகுகளைத் தயார் நிலையில் வைக்குமாறு ஏற்கனவே அறிவுறுத்தப்பட்டுள்ளது.

வடக்கு, வடமத்திய, மத்திய, கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களில் தற்போது நிலவும் மழையுடனான வானிலையை காட்டிலும் மேலும் அதிகரிக்கும் நிலை உள்ளது.

இதன்படி ஏற்படக்கூடிய அனர்த்தங்கள் குறித்து அவதானம் செலுத்தி, அவற்றிலிருந்து பாதுகாப்புப் பெறுவதற்காக இந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது என்றார்.

# பேரிடர் பாதித்த சிறுவர்களுக்கு உதவ நிதி திரட்டுவதில் சிரமம்

பேரிடரினால் பாதிக்கப்பட்டிருக்கும் சிறுவர்களுக்கும், குடும்பங்களுக்குத் தேவையான உடனடி உதவிகளை வழங்குவதற்கு எமது அமைப்புக்கு 7.8 மில்லியன் டொலர் நிதி அவசியமாகும். இருப்பினும் டிசெம்பர் 23 வரையான காலப்பகுதியில் 2.5 மில்லியன் டொலர்கள் நிதியுதவி மாத்திரமே கிடைக்கப்பெற்றிருப்பதுடன், 3.5 மில்லியன் டொலர்கள் நிதியுதவி வழங்கப்படும் என உத்தரவாதம் அளிக்கப்பட்டிருப்பதாக ஐ.நா. சிறுவர் பாதுகாப்பு அமைப்பான 'யுனிசெப்' அமைப்பு தெரிவித்துள்ளது.

'தித்வா' சூறாவளி காரணமாக ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு மற்றும் மண்சரிவு பேரிடர்களில் சிக்கிப் பல நூற்றுக்கணக்கானோர் உயிரிழந்திருப்பதுடன், இலட்சக்கணக கானோர் தமது இருப்பிடங்களையும் வாழ்வாதாரத்தையும் இழந்து வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இப்பேரிடர் இடம்பெற்று இன்றுடன் (28) ஒரு மாதம் பூர்த்தியடையவுள்ள நிலையில், இப்பேரிடரினால் குறிப்பாக சிறுவர்கள் முகங்கொடுத்திருக்கும் பாதிப்புக்கள் மற்றும் தற்போதைய மனிதாபிமான நிலைவரம் தொடர்பான தமது 5 ஆவது மதிப்பீட்டு அறிக்கையை யுனிசெப் அமைப்பு வெளியிட்டுள்ளது. அவ்வறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள தரவுகளின் முக்கியமான விடயங்கள் வருமாறு:

தற்போதைய சூழ்நிலையில் நாடளாவிய ரீதியில் சுமார் 12 இலட்சம் பேர் உடனடி மனிதாபிமான உதவிகள் தேவைப்படும் நிலையில் இருப்பதுடன், அவர்களில் 5 லட்சத்து 27 ஆயிரம் பேர் சிறுவர்களாவர். அதற்கமைய 'யுனிசெப்' அமைப்பு அதன் ஏனைய கிளை அமைப்புக்களுடன் இணைந்து இதுவரையில் சுமார் 76 ஆயிரத்து 600 பேருக்கு அவசியமான நீர் மற்றும் சுகாதார வசதிகளை வழங்கியிருக்கின்றது. அதேபோன்று 8,989 பேருக்கு அவசியமான போசணைசார் தேவைகளையும், 5675 சிறுவர்களுக்கான பாதுகாப்புசார் தேவைகளையும் பூர்த்திசெய்திருக்கின்றது. பேரிடரினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கும், குடும்பங்களுக்குத் தேவையான உடனடி உதவிகளை வழங்குவதற்கு யுனிசெப் அமைப்புக்கு 7.8 மில்லியன் டொலர் நிதி அவசியமாகும். இருப்பினும் டிசெம்பர் 23 வரையான காலப்பகுதியில் 2.5 மில்லியன் டொலர்கள் நிதியுதவி மாத்திரமே கிடைக்கப்பெற்றிருப்பதுடன், 3.5 மில்லியன் டொலர்கள் நிதியுதவி வழங்கப்படும் என உத்தரவாதம் அளிக்கப்பட்டிருக்கின்றது. அதேவேளை இக்காலப்பகுதியில் மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை, புத்தளம் மற்றும் கண்டி ஆகிய மாவட்டங்களில் அமைந்துள்ள 35 சிறுவர்நேய நிலையங்களில் உள்ள 3424 சிறுவர்களுக்கும், 1246 சிறுவர் பராமரிப்பாளர்களுக்கும் அவசியமான பாதுகாப்பு வசதிகள் வழங்கப்பட்டன.

அதேபோன்று 8,989 பேருக்கு அவசியமான போசணைசார் உதவிகளும் ஐந்து வயதுக்குக் குறைந்த சிறுவர்கள் 4,550 பேர், கர்ப்பிணித்தாய்மார் 2,557 பேர் மற்றும் பாலூட்டும் தாய்மார் 2,073 பேருக்கு அவசியமான உணவு உதவிகளும் வழங்கப்பட்டன.

அது மாத்திரமன்றி பேரிடரினால் மிகமோசமாகப் பாதிப்படைந்த பகுதிகளைச் சேர்ந்த மிதமான-கடுமையான மந்தபோசணை குறைபாட்டுக்கு ஆட்பட்டுள்ள 5 வயதுக்குக் குறைந்த 3,000 சிறுவர்களுக்கு அவசியமான உணவாக உட்கொள்ளத்தக்க போசணை மருந்துகள் வழங்கப்பட்டன. அத்தோடு தீவிர மந்தபோசணையினால் பாதிக்கப்பட்டுள்ள 200 சிறுவர்களுக்குத் தேவையான மருத்துவ சிகிச்சைகளும் அளிக்கப்பட்டன.

# பேரிடர் பாதித்த மக்களில் ஒரு பகுதியினரை வவுனியாவிலும் குடிமர்த்த அதிகாரிகள் ஆய்வு

*'தித்வா' சூறாவளியை அடுத்து ஏற்பட்ட பேரிடனால் நாடளாவிய ரீதியில் 2 இலட்சத்து 72 ஆயிரத்து 536 பேர் இடம்பெயர்ந்திருக்கின்றனர் என்று சுட்டிக்காட்டியுள்ள சர்வதேச புலம்பெயர்வு அமைப்பு, பாதிக்கப்பட்ட மக்களில் ஒரு பகுதியினரை கம்பஹா, மாத்தறை, கேகாலை மற்றும் வவுனியா போன்ற மாவட்டங்களில் மீள்குடியமர்த்துவது குறித்து அதிகாரிகள் ஆராய்ந்து வருவதாகத் தெரிவித்துள்ளது.*

*'தித்வா' சூறாவளி காரணமாக ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு மற்றும் மண்சரிவு அனர்த்தங்களில் சிக்கிப்பல நூற்றுக்கணக்கானோர் உயிரிழந்திருப்பதுடன், இலட்சக்கணக்கானோர் தமது இருப்பிடங்களையும் வாழ்வாதாரத்தையும் இழந்து வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.*

*இப்பேரிடரினால் சுமார் 18 இலட்சம் மக்கள் பாதிக்கப்பட்டிருப்பதுடன், அவர்களில் பெரும் எண்ணிக்கையானோர் தமது வீடுகளைவிட்டு இடம்பெயர்ந்து, தற்காலிகமாக நிறுவப்பட்டுள்ள பாதுகாப்புநிலையங்களில்தங்கவேண்டியநிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். அதன்படி இப்பேரிடரின் விளைவாக உள்நாட்டில்பதிவான இடப்பெயர்வுகள் தொடர்பான மதிப்பீட்டு அறிக்கை சர்வதேச புலம்பெயர்வு அமைப்பினால்வெளியிடப்பட்டுள்ளது. இவ்வறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள தரவுகள் கடந்த 17 – 19 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் திரட்டப்பட்ட தகவல்களை அடிப்படையாகக்கொண்டு தயாரிக்கப்பட்டவையாகும்.*

*இத்தரவுகளின்படி பேரிடரினால் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை 17 இலட்சத்து 88 ஆயிரத்து 572 ஆகும். கடந்த 12 ஆம் திகதியுடன் ஒப்பிடுகையில் இத்தொகையில் 3 சதவீத அதிகரிப்பு ஏற்பட்டிருப்பதாக சர்வதேச புலம்பெயர்வு அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.*

*அதேபோன்று 2 இலட்சத்து 72 ஆயிரத்து 536 பேர் இடம்பெயர்ந்திருப்பதுடன் அவர்களில் 19 சதவீதமானோர் பாதுகாப்பு நிலையங்களிலும், 81 சதவீதமானோர் உறவினர்களின் வீடுகள் உள்ளிட்ட சமூகமட்டத்திலான தங்குமிடங்களிலும் தங்கியுள்ளனர். அதேவேளை தற்போது நாடளாவிய ரீதியில் 723 பாதுகாப்பு நிலையங்கள் இயங்கிவருவதுடன் ஒரு இலட்சத்து 7 ஆயிரத்து 283 வீடுகள்பகுதியளவிலோ அல்லது முழுமையாகவோ சேதமடைந்துள்ளன.*

*மேற்குறிப்பிட்டவாறு இடம்பெயர்ந்திருப்போரின் எண்ணிக்கையை மாவட்ட ரீதியாக நோக்குமிடத்து, மத்திய மாகாணத்தின் கண்டி, மாத்தளை மற்றும் நுவரெலியா ஆகிய மாவட்டங்களில் முறையே 79 053, 25 739, 34 008 பேரும், கிழக்கு மாகாணத்தின் அம்பாறை, மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை மாவட்டங்களில் முறையே 444, 44, 42 பேரும், வடமத்திய மாகாணத்தின் அநுராதபுரம் மற்றும் பொலனறுவை ஆகிய மாவட்டங்களில் முறையே 980, 119 பேரும், வடமேல்மாகாணத்தின் குருணாகல் மற்றும் புத்தளம் ஆகிய மாவட்டங்களில் முறையே 825, 2 673 பேரும் இடம்பெயர்ந்துள்ளனர். அத்தோடு வடமாகாணத்தில் யாழ்ப்பாணத்தில் 47 பேரும், கிளிநொச்சியில் 4 பேரும், மன்னாரின் 435 பேரும் வவுனியாவில் 60 பேரும் இடம்பெயர்ந்திருப்பதுடன், சப்ரகமுவமாகாணத்தில்கேகாலையில் 41 494 பேரும், இரத்தினபுரியில் 19 399 பேரும் இடம்பெயர்ந்துள்ளனர். அதுமாத்திரமன்றி தென்மாகாணத்தின் காலி, அம்பாந்தோட்டை மற்றும் மாத்தறை ஆகிய மாவட்டங்களில் முறையே 4, 20, 4 பேரும், ஊவா மாகாணத்தின் பதுளை மற்றும் மொணராகலை ஆகிய மாவட்டங்களில் முறையே 42 791, 152 பேரும், மேல்மாகாணத்தின் கொழும்பு, கம்பஹா மற்றும் களுத்துறை மாவட்டங்களில் முறையே 23 125, 1 070, 4 பேரும் இடம்பெயர்ந்துள்ளனர்.*

*மேலும்பாதிக்கப்பட்ட மக்களில்ஒரு பகுதியினரை கம்பஹா, மாத்தறை, கேகாலை மற்றும் வவுனியா போன்றமாவட்டங்களில்மீள்குடியமர்த்தி, வீடுகளை நிர்மாணிப்பதற்கு அவசியமான காணி உரிமையை அவர்களுக்கு வழங்குவது குறித்து அதிகாரிகள் ஆராய்ந்து வருவதாகவும் சர்வதேச புலம்பெயர்வு அமைப்பு அதன் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.*



காலைக்கதிர் Kalaikkathir

## விமர்சனங்களை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

முடக்கிய அதே முறைமையை இன்று தேசிய மக்கள் சக்தி ஆளும்தரப்பு பின்பற்றுகிறது. இன்று நாட்டின் ஆட்சியாளர் அநுர திஸாநாயக்கவா அல்லது ஹிட்லர் திஸாநாயக்கவா என்ற சந்தேகம் மக்கள் மத்தியில் எழுந்துள்ளது. ஊடகங்கள் முடக்கப்பட்டால் நாட்டை இருள் சூளும் என ஆளும்தரப்பை எச்சரிக்கின்றோம். ஊடக அடக்குமுறைக்கு எதிராக அனைத்து கட்சிகளும் பேதமின்றி குரல் கொடுக்க வேண்டிய காலம் தோன்றியுள்ளது.

இதற்கு முன்னர் பத்திரிகையொன்றின் ஆசிரியர் குற்றப்புலனாய்வு பிரிவுக்கு அழைக்கப்பட்டபோது அதற்கெதிராக குரல் கொடுக்காததன் காரணமாகவே இன்று ஊடக நிறுவனத்தையே தடை செய்யுமளவுக்கு ஆளும்தரப்பின் சர்வாதிகாரம் உச்சமடைந்துள்ளது. எந்தவொரு பாசிச ஆளும்தரப்பினதும் முதல்படி ஊடக அடக்குமுறையேயாகும்.

இது அடுத்தடுத்து தொழிற்சங்கங்கள், இளைஞர் அமைப்புக்கள், சிவில் அமைப்புக்கள் என நீடிக்கும். ஆளும்தரப்பால் அச்சுறுத்தல் விடுக்கப்படும் ஊடகங்களுக்காக நாம் முன்னிற்பது எமக்காக நாம் முன்னிற்பதாகும். வரலாற்றில் முதல் முறையாக ஒரு ஆளும்தரப்பு உள்ளூராட்சித் தேர்தலில் (கடந்த மே மாதம்) 14.3 சதவீத மிகக் குறைந்த வாக்குச் சதவீதத்தைப் பெற்றுள்ளது.

தேசிய மக்கள் சக்தி எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு இலஞ்சம் கொடுத்து, சதித் திட்டங்களின் மூலமே உள்ளூராட்சி மன்றங்களின் அதிகாரத்தைக் கைப்பற்றியது. அண்மையில் நடைபெற்ற உள்ளூராட்சி மன்ற வரவு செலவுத் திட்ட வாக்கெடுப்புகளில், சுயேச்சைக் குழு உறுப்பினர்கள் கூட ஆளும்தரப்பிற்கு எதிராக வாக்களித்துள்ளனர். இது மக்கள் கருத்து ஆளும்தரப்பிற்கு எதிராக மாறியுள்ளதைக் காட்டுகிறது.

100-க்கும் மேற்பட்ட உள்ளூராட்சி மன்றங்களின் அதிகாரத்தை தேசிய மக்கள் சக்தி இழக்கும் அறிகுறிகள் தென்படுகிறது. கொழும்பு மாநகர சபை உறுப்பினர்கள் தங்களுக்கு வாக்களித்த மக்களுக்கு உண்மையாக இருக்கவேண்டும். பதவிகளுக்காகவோ அல்லது இலாபங்களுக்காகவோ தங்கள் மனசாட்சியை அடகு வைக்கக் கூடாது - என்றார்.

## பாதிக்கப்பட்டவர்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அரசுத் தலைவராகப் பதவியேற்றதும் “மக்களின் காணி மக்களுக்கே .. “ என கூறியதுடன் , திஸ்ஸ விகாரைக்காக அடத்தாக கையகப்படுத்தப்பட்டுள்ள காணிகளை விடுவிப்பதாக உறுதி அளித்திருந்தார். அரசுத் தலைவர் பதவியேற்று ஒன்றரை வருடங்களுக்கு மேலாகியும் காணியில் ஒரு சிறு துண்டேனும் விடுவிக்கப்படவில்லை.

இந்த நிலையில் நயினாதீவு நாக தீப விகாராதிபதி , “தையிட்டி விகாரை அமைந்துள்ள காணி மக்களுடைய காணி , அந்தக் காணியினை அவர்களிடம் மீள் அளிப்பதே அறம்” எனக் கூறி இருந்தார். அதனை அடுத்து , காணி உரிமையாளர்கள் விகாரதிபதியை சந்தித்து , தமது காணி உரிமை தொடர்பிலான ஆவணங்களின் பிரதியை கையளித்ததுடன், தமது காணிகளை விடுவித்துத் தருமாறு விகாரதிபதியிடம் கோரிக்கை விடுத்தனர்.

இதேவேளை , தையிட்டி விகாரை தொடர்பில் மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார், கடற்தொழில் அமைச்சர் சந்திரசேகரனிடம் கேள்வி எழுப்பியபோது, சமூக மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனும் அடையாளத்துடன் கூட்டத்தில் கலந்துகொண்ட, தேசிய மக்கள் சக்தியினர் குழப்பத்தை ஏற்படுத்தியமையால் அமைச்சர் தையிட்டி விகாரை தொடர்பில் கருத்துக்களை கூறாது கூட்டத்தை நிறைவு செய்து வெளியேறினார்.

## பேரிடரால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உதவிகள் வழங்குவது தொடர்பில் சுற்றறிக்கை தயாரிக்கப்பட முன்னரே 50,000 ரூபா நிவாரணக் கொடுப்பனவு அறிவிக்கப்பட்டது. பேரிடர்களால் முற்றாகச் சேதமடைந்த வீடுகள், பகுதியளவில் சேதமமைந்த வீடுகள் மற்றும் வெள்ள நீர் அல்லது மண் உட்புகுந்த வீடுகள் என அனைத்துக்கும் இந்த கொடுப்பனவுகள் அறிவிக்கப்பட்டன.

அதேபோன்று வீடுகளைத் தூய்மைப்படுத்துவதற்காக அறிவிக்கப்பட்ட 25 000 கொடுப்பனவுகளும் மதிப்பீட்டின் அடிப்படையில் வழங்கப்படவில்லை. பாதிக்கப்பட்ட வீடுகளை முன்னரைவிடச் சிறந்த நிலையில் சீரமைத்துக் கொடுப்பதற்காகவும், இழந்த உயிர்களைத் தவிர ஏனைய அனைத்தையும் நாம் மீட்டுக் கொடுப்பதற்காகவுமே வழங்கப்பட்டன. மக்களின் பக்கமிருந்தே நாம் அனைத்தையும் சிந்திக்கின்றோம்.

‘தித்வா’ சூறாவளியின் பின்னர் முழுமையாக அல்லது பகுதியளவில் சேதமடைந்த வீடுகளைக் கொண்ட குடும்பங்களுக்கு ஆதரவளிக்கும் நோக்கில், முறையான சுற்றறிக்கைகள் வெளியிடப்படுவதற்கு முன்னரே ஆரம்பக்கட்ட நிதியுதவிகள் அறிவிக்கப்பட்டன.

பகுதியளவில் சேதமடைந்த 120,000 இற்கும் அதிகமான வீடுகளுக்கான விரிவான மதிப்பீடுகளை மேற்கொள்வதற்கு சுமார் ஒரு வருட காலம் எடுக்கும். இது உதவிகளை வழங்குவதில் தாமதத்தை ஏற்படுத்தக்கூடும். எனவே, சரியான நேரத்தில் உதவிகளை உறுதி செய்வதற்காக, மதிப்பீடுகள் ஏதுமின்றி பாதிக்கப்பட்ட ஒவ்வொரு வீட்டிற்கும் தலா 500,000 ரூபா நிலையான தொகையை வழங்க ஆளும்தரப்பு தீர்மானித்துள்ளது.

இருப்பினும், முறையான சேத மதிப்பீட்டை மேற்கொள்ள விரும்பும் குடும்பங்கள் இந்த நிலையான கொடுப்பனவைப் பெறுவதைத் தவிர்க்கலாம். அத்தகைய சந்தர்ப்பங்களில் மதிப்பீடு செய்யப்பட்ட சேதத்தின் மதிப்பின் அடிப்படையில் இழப்பீடு வழங்கப்படும்.

மதிப்பீடு செய்யப்பட்ட சேதத்தின் மதிப்பு 2.5 மில்லியன் ரூபா அல்லது 5 மில்லியன் ரூபாவாக இருந்தாலும், ஆளும்தரப்பு அதற்கேற்ப முழுமையான மதிப்பீட்டுத் தொகையை வழங்கும் - என்றார்.

### மத்திய மாகாணத்தில்

# பாடசாலைகளின் பேரிடர் பாதிப்பு மதிப்பீட்டு அறிக்கை பிரதமரிடம்

மத்திய மாகாணத்தில் பேரிடர் பாதிப்பு அபாயமுள்ள 160 பாடசாலைகள் குறித்த மதிப்பீட்டு அறிக்கை கல்வி அமைச்சர் என்ற வகையில் பிரதமர் ஹறிணியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகம் அறிவித்துள்ளது.

குறித்த நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகம் பொறியியலாளர் டாக்டர் ஆசிரி கருணாவர்த்தன இது தொடர்பில் தெரிவித்த தாவது:

மத்திய மாகாணத்தில் நிலச்சரிவு அபாயத்தில் உள்ள பல பாடசாலைகள் குறித்து ஒரு முடிவு எடுக்கப்பட வேண்டியுள்ளது. அண்மைய இடர் மதிப்பீட்டு ஆய்வுகளின் பிரகாரம் பாதகமான வானிலை காரணமாக நுவரெலியா மற்றும் மாத்தளை மாவட்டங்களில் உள்ள பல பாடசாலைகள் நேரடியாக மண்சரிவு அபாயங்களுக்கு உள்ளாகும் நிலமை அடையாளம் காணப்பட்டுள்ளன.

பாதிக்கப்பட்ட சில பாடசாலையின் வளாகங்களை உறுதிப்படுத்த பொறியியல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தலாம், அத்தகைய நடவடிக்கைகள் சாத்தியமில்லாத மற்றும் மாற்று முடிவுகள் தேவைப்படும் பாடசாலைகள் குறித்து கல்வி அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளன.

தர மதிப்பீட்டு ஆய்வு அறிக்கையின்படி, கண்டி ஹசலக பகுதியைத் தவிர, கண்டி மாவட்டத்தில் உள்ள எந்தப் பாடசாலைகளும் மண்சரிவு ஆபத்தில் இருப்பதாக அடையாளம் காணப்படவில்லை.

மத்திய மாகாணத்தில் உள்ள 160 பாடசாலைகளை உள்ளடக்கிய விரிவான மதிப்பீட்டு அறிக்கை ஏற்கனவே கல்வி அமைச்சரான, பிரதமர் ஹறிணியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. ஆகவே கல்வி அமைச்சின் பரிந்துரைகளின்படி அடுத்தகட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டியுள்ளது.

அடையாளம் காணப்பட்ட அதிக ஆபத்துள்ள பாடசாலைகள் குறித்து தற்போது மேலதிக ஆய்வுகள் நடைபெற்று வருகின்றன, அண்மைய கண்டுபிடிப்புகள் மற்றும் முடிவுகள் கல்வி அமைச்சகத்திற்கு தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

### போரிடர் பாதிப்புக் குறித்த

# உலக பொருளாதார நிபுணர்களின் அறிக்கையை கவனத்தில் எடுக்குக

### முன்னிலை சேசலிசக் கட்சி சுட்டிக்காட்டு

‘தித்வா’ புயல் பேரிடரைக் கருத்திற்கொண்டு இலங்கையின் பொருளாதாரம் தொடர்பாக எடுக்கப்பட வேண்டிய அடுத்தகட்ட நடவடிக்கைகள் குறித்து, உலகின் முன்னணி பொருளாதார நிபுணர்கள் குழுவொன்று விடுத்துள்ள அறிவிப்பை ஆளும்தரப்பு அதீதமாக கவனத்தில் கொள்ள வேண்டுமென முன்னிலை சோசலிச கட்சியின் பிரசார செயலாளர் துமிந்த நாகமுவ சுட்டிக்காட்டியுள்ளார்.

நுகேகொடவில் உள்ள கட்சி அலுவலகத்தில் வெள்ளிக்கிழமை செய்தியாளர்களிடம் பேசியபோது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

‘தித்வா’ புயலின் அழிவுகளைக் கருத்திற்கொண்டு, இலங்கையின் வெளிநாட்டுக் கடன் கொடுப்பனவுகளைத் தற்காலிகமாக நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கோரி நோபல் பரிசு பெற்ற ஜோசப் ஸ்டிக்லிட்ஸ் உட்பட உலகின் முன்னணி 121 பொருளாதார நிபுணர்கள் அண்மையில் கூட்டறிக்கையை வெளியிட்டுள்ளனர்.

இலங்கை எதிர்நோக்கியுள்ள தற்போதைய அவசர தேவைகள் காரணமாக சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து ஏற்கனவே மேலதிகக் கடன் பெறப்பட்டுள்ளதாகவும், எதிர்காலத்தில் இன்னும் அதிகக் கடன்களைப் பெற வேண்டியிருக்கும் என்றும் அந்த நிபுணர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதன் காரணமாக, இலங்கையின் வெளிநாட்டு இறையாண்மைக் கடன் கொடுப்பனவுகளை உடனடியாக நிறுத்தி, புதிய சூழ்நிலைகளின் கீழ் கடன் மறுசீரமைப்பை மேற்கொண்டு கடன் நிலைத்தன்மையை மீள நிலைநிறுத்துமாறு அவர்கள் மேலும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது குறித்து, ஆளும்தரப்பு மிகுந்த கவனத்துடன் பரிசீலிக்க வேண்டும். நாட்டுக்குள் இருந்துகொண்டு நாம் கூறும் விடயங்களை ஆளும்தரப்பால் ஏற்க முடியாவிட்டால், உலகின் பலம் வாய்ந்த பொருளாதார நிபுணர்கள் கூறியுள்ளதையாவது ஆளும்தரப்பு கவனத்தில் கொள்ள வேண்டும். அதனடிப்படையில் உனடியாக குறுகிய கால மற்றும் நீண்டகால திட்டமிடல்களைச் செய்ய வேண்டும்.

# இலங்கை ஏற்றுமதித் துறை இந்தாண்டு 5.8 வீதம் வளர்ச்சி

இலங்கையின் ஏற்றுமதித்துறை தொடர்ந்து முன்னேற்றமடைந்து வருவதாகவும், அதற்கமைய கடந்த ஜனவரி – நவம்பர் மாதம் வரையான காலப்பகுதியில் அத்துறை 5.8 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்திருப்பதாகவும் ஏற்றுமதி அபிவிருத்திச்சபை தெரிவித்துள்ளது.

இலங்கை சுங்கத் தரவுகள் மற்றும் ஏற்றமதித் தரவுகளின் பிரகாரம் இரத்தினம் மற்றும் ஆபரணங்கள், பெற்றோலிய உற்பத்திகள் மற்றும் சேவைகள் என இக்காலப்பகுதியில் ஏற்றுமதிகள் மூலமான மொத்த வருமானம் 15,776.36 மில்லியன் டொலர்களாகப் பதிவாகியுள்ளது. கடந்த நவம்பர் மாதத்தில் மாத்திரம் வணிகப்பொருட்கள் மற்றும் சேவை ஏற்றுமதிகள் மூலமான வருமானம் 1,364.52 மில்லியன் டொலர்களாகப் பதிவாகியிருப்பதுடன் கடந்த 2024 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்துடன் ஒப்பிடுகையில் இம்முறை 5.56 சதவீத வளர்ச்சியைக் காண்பித்துள்ளது.

இந்த அடைவு குறித்துக் கருத்து வெளியிட்டுள்ள ஏற்றுமதி அபிவிருத்திச்சபையின் தலைவர் மங்கல விஜேசிங்க, ஜனவரி – நவம்பர் வரையான காலப்பகுதியில் இலங்கையின் ஏற்றுமதி வருமானம் 15,776.36 மில்லியன் டொலர்களாகப் பதிவாகியிருப்பது மிகவும் வலுவான வளர்ச்சியைப் பிரதிபலிப்பதாகத் தெரிவித்துள்ளார்.

அத்தோடு இந்த அடைவானது செயற்திறன்மிக்க வகையில் நடைமுறைப்படுத்தப்பட்ட ஏற்றுமதி அபிவிருத்தி உத்திகள் மூலம் ஆதரவளிக்கப்பட்ட இலங்கை ஏற்றுமதித்துறையின் மீண்டெழும் தன்மையையும், போட்டித்தன்மையையும் காண்பிப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதுமாத்திரமன்றி வருடாந்த ஏற்றுமதி இலக்கின் 86.3 சதவீதத்தினை நவம்பர் மாத இறுதிக்குள் அடைந்திருப்பது ஏற்றுமதித்துறை சார்ந்தோரின் உறுதிப்பாடு மற்றும் அர்ப்பணிப்புடன்கூடிய கடப்பாட்டைப் பிரதிபலிப்பதாகவும் மங்கல விஜேசிங்க சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும் நவம்பர் மாதத்தில் மாத்திரம் வணிகப்பொருட்களின் ஏற்றுமதிகள் 5.95 சதவீதத்தினால் அதிகரித்து, 1,053.22 மில்லியன் டொலர் வருமானத்தை நாட்டுக்கு ஈட்டித்தந்துள்ளது. ஜனவரி – நவம்பர் வரையான காலப்பகுதியில் வணிகப்பொருள் ஏற்றுமதி மூலம் திரட்டப்பட்ட மொத்த வருமானம் 12,417.98 மில்லியன் டொலர்களாகும்.

# இறக்குமதி வாகனங்களுக்கான அபராதக் கட்டணத்தை நீக்குக

### வர்த்தகர்கள் கோரிக்கை

சமீபத்திய பேரிடர் சூழலால் ஏற்பட்டுள்ள பொருளாதாரச் சவால்களைக் கருத்தில் கொண்டு, 3 மாதங்களின் பின்னர் விடுவிக்கப்படும் வாகனங்களுக்கு விதிக்கப்படும் 3 சதவீத அபராதக் கட்டணத்தை ஆளும்தரப்பு நீக்க வேண்டும் என இலங்கை வாகன இறக்குமதியாளர்கள் சங்கத்தின் தலைவர் பிரசாத் மானகே கோரிக்கை விடுத்துள்ளார்.

கொழும்பில் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்து இந்தக் கோரிக்கையை முன்வைத்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

பேரிடர் நிலைமையால் வாகன விற்பனை பெருமளவில் வீழ்ச்சியடைந்துள்ளது. நிதி நெருக்கடி காரணமாக பல வாடிக்கையாளர்களால் வாகனக் கொள்வனவை முழுமைப்படுத்த முடியாமலுள்ளது. அத்துடன், பொதுமக்களால் பொதுவாகப் பயன்படுத்தப்படும் சிறிய ரக வாகனங்களின் விலைகளைக் குறைப்பதற்கு ஆளும்தரப்பு முன்னுரிமையளிக்கவேண்டும்.

குறிப்பாக, நடுத்தர வருமானம் பெறுபவர்களால் கொள்வனவு செய்யப்படும் அல்டோ, வேகென் ஆர், யாரிஸ் மற்றும் ஹஸ்ட்லர் போன்ற குறைந்த எஞ்சின் திறன் கொண்ட வாகனங்களை மக்கள் இலகுவாகப் பெற்றுக்கொள்ளும் வகையில், அவற்றின் விலை மற்றும் வரி அமைப்பில் திருத்தங்களை மேற்கொள்ளுமாறு ஆளும்தரப்பிடம் கேட்டுக் கொள்கின்றோம்.

எரிபொருள் சிக்கனமான சிறிய ரக வாகனமான வேகோன் ஆர், ஒன்றுக்கு தற்போது சுமார் 4 மில்லியன் ரூபா வரி அறவிடப்படுகிறது. இவை நடுத்தர வர்க்கத்தினரால் கொள்வனவு செய்யப்படும் வாகனங்கள். இவ்வாறான வாகனங்களை ஊக்குவிப்பதோடு, அவற்றை பொதுமக்கள் எளிதில் பெற்றுக்கொள்ளும் வகையில் வசதிகள் செய்யப்பட வேண்டும் - என்றார்.

# டக்ளஸை பொலிஸ் காவலில் வைத்து விசாரிக்க கம்பஹா நீதிமன்றம் அனுமதி

குற்றப் புலனாய்வுத் திணைக்கள (சிஐடி) அதிகாரிகளால் கைது செய்யப்பட்ட ஈபிடிபியின் செயலாளர் நாயகமும் முன்னாள் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தாவை 72 மணி நேரம் பொலிஸ் காவலில் வைத்துத் தீவிர விசாரணை செய்ய குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்கு கம்பஹா நீதிவான் மன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

பாதாள உலகக் குழு உறுப்பினரான மதுஷால் வழங்கப்பட்ட தகவலுக்கமைய, 2019ஆம் ஆண்டு கம்பஹா - வெலிவேரிய பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட துப்பாக்கிகளில் ஒன்று, 2001ஆம் ஆண்டு இராணுவத்தால் டக்ளஸ் தேவானந்தாவின் தனிப்பட்ட பயன்பாட்டுக்காக வழங்கப்பட்ட கைத் துப்பாக்கி என்று குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினர் கண்டுபிடித்தனர்.

இந்தக் கைத்துப்பாக்கி, டக்ளஸ் தேவா னந்தாவுக்கு, இலங்கை இராணுவத்தால் சட்டரீதியாக வழங்கப்பட்டது. எனவே இது தொடர்பில் வாக்குமூலம் வழங்குவதற்காக, டக்ளஸ் தேவானந்தா, குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கு அழைக்கப்பட்டிருந்தார். நேற்று அவர் அங்கு சென்றிருந்தபோது அவர் அதிகாரிகளால் கைது செய்யப்பட்டார்.

அவர் நேற்று கம்பஹா நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டார். அவரை 72 மணி நேரம் பொலிஸ் தடுப்புக் காவலில் வைத்து தீவிரமாக விசாரிக்க நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.


முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City
எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!
இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!
உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்
முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்
SUPERMARKET
4th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd
தொடர்புகளுக்கு: 0777 43 5557


வயலும் வயல்சார்ந்த இடமுமான 'மருதம்' நிலத்தில் பண்ணை வீட்டுடன் கூடிய செயற்திட்டம்
மருதம் பசுமை நகர்
Marutham Green City
நல்லூர் ஆலயம் 9km
கச்சேரி 8km
யாழ் பேருந்து நிலையம் 11km
யாழ் புகையிரதநிலையம் 10km
வடக்கு மாகாணசபை 9km
உள்ளக வசதிகள்
நூலகம்
நீச்சல் தடாகம்
உணவகம்
சிறுவர் பூங்கா
விளையாட்டுத்திடல்
மீன்பிடி குளம்
A – 2 பரப்பு மேட்டுக்காணியுடன் 2 பரப்பு வயல்க்காணி
B – 2 பரப்பு மேட்டுக்காணியும் 2 பரப்பு வயல்க்காணியும் (தனித்தனியாக)
C – 2 பரப்பு மேட்டுக்காணி பிரதான வீதியுடன்
0777 43 55 57







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 28.12.2025 வெளியிடப்பெற்றது.